## 63

# துன்மார்க்கத்தின் முடிவு

## (20:1-3, 7-10)

*பிசாசின் அடைவிடம், நீண்ட காலத்திற்கு முன்பாகவே தீர்மானிக்கப் பட்டாயிற்று. நியாயத்தீர்ப்பின் நாளில், அரியணையில் வீற்றிருப்பவர், தமது இடது புறத்தில் இருப்பவர்களை நோக்கி, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்று கூறுவார் (மத்தேயு 25:41). பரலோகம் என்பது ஆயத்தம்பண்ணப்பட்ட ஒரு இடமாக இருப்பதுபோலவே (யோவான் 14:1-3), நரகமும் ஆயத்தம்பண்ணப்பட்ட - தொடக்கத்தில் பிசாசுக்கென்றே ஆயத்தம்பண்ணப்பட்ட இடமாக உள்ளது.*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம், சாத்தானுக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்ட இடத்திற்கு அவன் தூக்கியெறியப்படுதலைப் பற்றியதாக உள்ளது. (வெளிப்படுத்தின விசேஷம் என்ற) இந்தப் புத்தகத்தில் இதற்கு முன்பு அவனது அடியாட்கள் விழுந்துபோயினர்,[1] ஆனால் அந்த நிகழ்ச்சியானது துன்மார்க்கத்தை நீக்கிப்போடவில்லை. துன்மார்க்கத்தின் ஆதாரமூலத்தை அழித்துப்போடாத வரையிலும், துன்மார்க்கத்தின்மீது முற்றிலுமான வெற்றி இருக்க முடியாது. நீங்கள் சிலந்தி வலைகளை நாள் முழுவதும் கலைத்துப்போட்டுக்கொண்டிருக்கலாம்; ஆனால் நீங்கள் சிலந்தியைக் கொல்லாத வரையிலும் இன்னும் அதிகமான சிலந்தி வலைகளைப் பெற வேண்டியிருக்கும்.*

*வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரத்தின் முதல்பகுதியில், பிசாசானவன் கட்டுப்படுத்தப்பட்டதை நாம் கண்டோம்; இப்போது, அவன் நீக்கப்படுவதை நாம் காண்போம். இந்த நிகழ்ச்சியின் முக்கியத் துவத்தை வார்த்தைகளினால் விவரிக்க இயலாது. உள்ளூர் செய்தித்தாள் அலுவலகம் ஒன்றில், சட்டமிடப்பட்ட செய்தித்தாள்கள் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன, அவைகள் முக்கியமான நிகழ்ச்சிகளின் தலைப்புச் செய்திகளைக் காட்சிப்படுத்தின. அவற்றில் ஒரு தலைப்புச் செய்தியில், பெரிய எழுத்துக்களில், "அமெரிக்க ஐக்கியநாடு யுத்தத்தை அறிவிக்கிறது" என்று உள்ளது. இன்னொன்று, ''யுத்தம் முடிவடையும்'' என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது. இதைக்காட்டிலும் அவ்வளவு பழைமையாயிராத இன்னொரு செய்தித்தாளில், "மனிதர்கள் சந்திரனில் நடக்கின்றனர்" என்றுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம் ஒரு செய்திதாளில் அச்சிடப்பட வேண்டும் என்றால், அதன் தலைப்புச் செய்தியானது ஐந்து - அங்குல உயரமான எழுத்துக்களில் பின்வருமாறு*

இருக்கும்: **"சாத்தான் தோல்வியடைந்தான்!"** இது, தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவருக்கும் எவ்வளவு மன எழுச்சியூட்டுவதாக இருக்க வேண்டும்!

இந்த பாடம் இன்னும் 20ம் அதிகாரத்தில் இருந்தே வருவதால், எஞ்சியுள்ள ஒருசில சிக்கலான விஷயங்களைப் பற்றி நாம் ஆய்ந்துபார்க்க வேண்டியுள்ளது. இருப்பினும், இந்த அதிகாரத்தின் நோக்கத்தைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள். இவ்விடமானது, நாம் "சாத்தானுக்குப் பிரிவையும் - நல்ல முறையில் வேண்டாதவற்றைக் கழித்தலையும்" கூறித் துரத்த வேண்டிய வேளையாக உள்ளது!

## விவரித்துக்கூற இயலாத "ஏன்?" (20:1-3, 7, 8)

நமது பாடத்தின் பிரதான பகுதியானது, 1முதல் 3வரையுள்ள வசனப்பகுதி முடியும் இடத்தில் தொடங்குகிறது. அந்த வசனங்களில் பின்வரும் உருவகம் நமக்கு முன் அமைக்கப்பட்டது:

> ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப்பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும் (வசனங்கள் 1-3).

பிற்பாடு, வசனம் 7மற்றும் 8ஆகியவற்றில், "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலில் இருந்து விடுதலையாகி ..." என்று நாம் வாசிக்கின்றோம். சாத்தான் சிறைச்சாலையை உடைத்துக்கொண்டு வெளிவரவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவனைக் கர்த்தர் நிபந்தனையின்பேரில் விடுதலையாக்கியிருந்தார் என்பதைக் கவனியுங்கள்.[2] அசாதாரணமான இந்தக்கூற்று, கலக்கமூட்டும் கேள்விகளின் பெருக்கொன்றை உண்டாக்கியுள்ளது. இதைக்காட்டிலும் அதிகம் திகைத்து மிரளச்செய்வது வேறெதுவும் இல்லை: *"ஏன்?"* தெய்வீக நோக்கங்கள் சில செயல்படுத்தப்பட்டாக வேண்டியிருந்தது என்பது உறுதி[3] - ஆனால் அவை என்னவாக இருக்க முடியும்?

வெளிப்படுத்தின விசேஷத்தின் சில இடங்களில் பெரும்பாலான விளக்கவுரையாளர்கள் கருத்து ஒருமிக்கின்றனர், ஆனால் இவ்விடம் அவற்றில் ஒன்றாக இருக்கிறது. *''ஏன்?''* என்ற இந்த கேள்விக்கு *''நமக்குத் தெரியாது''* என்பதே ஏறக்குறைய உலகளாவிய பதிலாக உள்ளது. டொனுல்டு குத்ரீ என்பவர், "இந்தக் கொஞ்சக்கால விடுதலை என்பது, இரகசியங்கள் நிறைந்த இந்தப்புத்தகத்தின் மிகவும் இரகசியமான

நிகழ்ச்சிகளில் ஒன்றாக உள்ளது''[4] என்று எழுதினார். ஃபிராங்க் பேக் என்பவர், "[சாத்தான்] 'கொஞ்சக்காலம்' மாத்திரம் விடுதலை செய்யப்பட வேண்டியது ஏன் என்பது விளக்கவுரையாளர்கள் யாவருக்கும் இரகசியமானதாக/புரியாப்புதிராக உள்ளது''[5] என்று குறிப்பிட்டார். விடுதலை செய்யப்பட்டதற்கான காரணங்குறித்துச் சில எழுத்தாளர்கள் யூகம் செய்திருக்கின்றனர்; மற்றவர்கள், ''நாம் காத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது'' என்று கூறுகின்றனர்; ஆனால் பெரும்பான்மை யானவர்கள், ஏதோ ஒருவகையில், "உண்மையில் இதை நாம் நிச்சயமாய் அறிவதில்லை"[6] என்று கூறுகின்றனர்.

யூகத்தில் நீங்கள் ஆர்வம் கொண்டிருந்தால், இங்கே ஒரு மாதிரி தரப்படுகிறது: ஒருவேளை, யோபு சோதிக்கப்பட்டதுபோலவும் (யோபு 1; 2), பேதுருவைச் சாத்தான் சோதிக்க விரும்பியது போலவும் (லூக்கா 22:31). மனிதகுலம் சோதிக்கப்படுவதற்காகத் தேவன் சாத்தானை விடுதலை யாக்குவார். ஒருவேளை இது, இயேசு வரும்போது பூமியின்மீது விசுவாசத்தைக் காண்பதென்பது அவருக்கு ஏன் கடினமாயிருக்கும் என்பதை விளக்குவதாயிருக்கலாம் (லூக்கா 18:8). சாத்தான், மற்ற தெய்வீகப் பண்பினங்கள்[7] தனக்கிருப்பதுபோன்று நடித்தபடியால், இது ஒருவேளை (அபத்தத்தைக் காண்பிக்கத்தேவனால் அனுமதிக்கப்பட்டது என்ற வகையில்) இரண்டாம் வருகைபற்றி, சாத்தானின் மலிவான போலி நடிப்பாக இருக்கலாம். ஒருவேளை, ''விடுவித்தல்'' என்பது பற்றிய குறிப்பானது, கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாய் இருப்பதில் இருந்து தவறிவிடக்கூடாது என்பதற்கான ஒரு நினைவூட்டுதலாக இருக்கலாம் (1 பேதுரு 5:8). ஒருவேளை தேவன் சாத்தானை விடுவித்து, அவன் தனது மோசமான செயல்களைச் செய்யத் துணியவைத்தல் என்பது, பிசாசானவன் தேவனை எதிர்கொள்ளும்போது அவனது உள்ளான பலவீனத்தை வெளிப்படுத்துவதற்காக என்று இருக்கலாம். இந்த கருத்துக்களில் சில, ஏற்பில்லாதவைகளாய்க் காணப்படுகையில், மற்றவைகள் அறிவுக்குப் பொருத்தமான அளவைக் கொண்டிருக்கலாம்; ஆனால் இவையாவையும் கற்பனைகள் என்ற வகையிலேயே உள்ளன.

மேற்கூறப்பட்ட யூகங்களில் பெரும்பான்மையானவை, பிசாசு விடுதலையாக்கப்படும் நிகழ்ச்சி, இரண்டாம் வருகைக்குச் சற்று முன்பாக நடக்கும் என்ற யூகத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவ்வசனப் பகுதியில் நாம் காலத்தைத் தவறான வழியில் கண்ணோக்கிக் கொண்டுள்ளோம் என்பது சிரமத்தின் ஒரு பகுதியாக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளதா?

## பொருத்தமற்ற "எப்பொழுது?" (20:3, 7)

தரிசனத்தில் ''கொஞ்சக்காலம்'' என்பது (வசனம் 3) ''ஆயிரம் வருஷங்கள்'' என்பதற்குப் பின்னால் வருகிறது என்பது, [சாத்தானை] விடுதலையாக்குதல் பற்றி நாம் கொண்டுள்ள பிரச்சினையாக (ஒருவேளை பிரதான பிரச்சினையாக) இருக்கிறது: சாத்தான் ஆயிரம் ஆண்டுகள்

அளவாகக் கட்டிவைக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், வேதசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றனர். பின்பு, எல்லாம் நன்றாயிருக்கிறது என்று காணப்படும் வேளையில், பிசாசானவன் திடீரென்று விடுதலை செய்யப்பட்டு தனது வழக்கமான துன்மார்க்கத் தாறுமாறுகளைச் செய்ய வருகின்றான். விடுதலை செய்யப்படும் நேரம் நம்மைக் குழப்புகிறது.

ஒருவேளை நாம், இவ்வசனப்பகுதியின் கால அம்சத்தைக் கண்ணோக்கும் வழிமுறையைச் சரிசெய்வது அவசியமாய் இருக்கலாம். அடையாளத்துவ மொழிநடையைப் பயன்படுத்தும் தரிசனம் ஒன்றை நாம் கண்ணோக்குகின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட ஒரு காட்சி அமைவில், நீண்ட காலத்தைத் தொடர்ந்து வரும் கொஞ்சக்காலம் என்பதை நாம் நேரடியான சொற்றொடர்கள் என்ற வகையில் நினைத்துப் பார்க்க வேண்டுமா? “ஆயிரம் ஆண்டுகள்” என்பது காலம் என்ற வேளையாக இருப்பதில்லை, அது ஒரு கருத்தாக இருக்கிறது என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். விஷயம் இப்படியிருக்க, ஒருவேளை நாம், “கொஞ்சக் காலம்” என்பதை குறிப்பிட்ட கால வேளை என்று நினைக்கக்கூடாது என்றிருக்கலாம். (“ ‘கொஞ்சக்காலம்’ என்பதன் மீதான சிந்தனைகள்’’ என்ற துணைப்பாடத்தைக் காணவும்.) இதற்குப்பதிலாக, இந்த உருவகம், ஒரு கருத்தை அறிவிப்பதை நோக்கங் கொண்டிருக்கலாம். அது என்ன கருத்து? இங்கு சில சாத்தியக்கூறுகள் தரப்படுகின்றன:

முந்திய பாடம்[8] ஒன்றில் சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, “கொஞ்சக்காலம்” என்பது “ஆயிரம் ஆண்டுகள்” என்பதற்கு நேர் எதிராக இருத்தல் என்பதை மாத்திரம் நோக்கங்கொண்டிருக்கலாம்: சாத்தான் கட்டிவைக்கப்பட்டிருத்தலுடன் ஒப்பிடும்போது, அவனுடைய “விடுதலை” என்பது, குறுகிய மற்றும் அற்பமான நிகழ்ச்சியாக இருக்கலாம். சாத்தான் எப்போதுமே தெய்வீக ஆணையினால் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றான்; அவன் செய்யும் ஒவ்வொன்றும் தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது.

ஒரு வேளை, ‘‘கொஞ்சக்காலம்’’ என்ற சொற்றொடர், 12:12ல் பயன்படுத்தப்பட்டபோது கொண்டிருந்த அதே அடிப்படை அர்த்தத்தை இங்கும் கொண்டிருக்கலாம்: “... பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்கால மாத்திரம்[9] உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால் ... .” இந்த வார்த்தைகள், சாத்தானுடைய நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அர்த்தப்படுகின்றன - அவனும் இதை அறிந்திருக்கின்றான். 12ம் அதிகாரம், சாத்தானைத் தோல்வியுற்ற விரோதி என்ற வகையில் சித்தரிக்கிறது; 20ம் அதிகாரம் அவனைக் கட்டப்பட்ட விரோதி என்ற வகையில் சித்தரிக்கிறது. இவ்விரு இடங்களிலும், இவன் தனக்கு விடப்பட்டுள்ள ‘‘கொஞ்சக்காலத்தில்’’ தன்னால் இயன்ற அளவுக்கு அதிகமான சேதத்தை விளைவிப்பதையே நோக்கங்கொண்டுள்ளான் என்று நாம் காணுகின்றோம்.

‘‘கொஞ்சக்காலம்’’ என்ற சொற்றொடரானது, பிசாசானவன்

மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்கள் என்பது, அவ்வப்போது சூழ்நிலையால் தளர்த்தப்படும் வேளைகள் எழும்பும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம்.[10] சாத்தான் சிலுவையினாலும் சுவிசேஷத்தினாலும் கட்டப்பட்டுள்ளான் என்று முன்பு நாம் வலியுறுத்தினோம். மக்கள் சிலுவையைப் பற்றிக் கேள்விப்பட வாய்ப்புக்கொண்டிராது இருந்த, சுவிசேஷம் பிரசங்கிக்கப் படாத காலங்கள் மற்றும் இடங்கள் பற்றிய விஷயம் என்ன? அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இந்த உலகத்தில் நிலவியிருந்தன, நிலவுகின்றன மற்றும் நிலவும் என்பது கவலைக்குரிய விஷயமாக உள்ளது. விஷயம் அவ்வாறு இருக்கையில் மக்களின் இருதயங்கள் மற்றும் வாழ்வு ஆகியவற்றின்மீது, சாத்தான் தடையற்ற கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளான்.

ஒருவேளை இந்தக் கருத்துக்கள், ''கொஞ்சக்காலம்'' என்ற சொற்றொடர் அறிவிக்க நோக்கம் கொண்டுள்ள கருத்து என்ன என்பது பற்றி உங்கள் சிந்தனையைத் தூண்டிவிடப் போதுமானவையாக இருக்கலாம்.

“எப்பொழுது?” என்ற கருத்தைவிட்டு நாம் விலகிச் செல்வதற்கு முன்பு, கடைசியாக ஒரு சாத்தியக்கூற்றை முன்மொழிவது எனக்கு அவசியமாக உள்ளது: 5 மற்றும் 7 ஆகிய இரண்டு வசனங்களுமே, “ ஆயிரம் ஆண்டுகள்” என்பது ''முடிவடைந்தது'' என்று குறிப்பிடுகின்றன.[11] 5ம் வசனத்தைப் பொறுத்தமட்டில், '' 'ஆயிரம் ஆண்டுகள்' பற்றிய கூற்றானது 'முடிவடைந்தது' என்றுள்ளது ... இந்த யுகத்தின் முடிவைக் குறிக்கிறது - இது கிறிஸ்து மறுபடியும் வரும்போது, மரித்தோர் உயிர்ப்பிக்கப்பட்டு, ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படும் வேளையைக் குறிக்கிறது” என்று முன்மொழிந்தேன். 5ம் வசனம் அதை அர்த்தப்படுத்துகிறது என்றால், 7ம் வசனத்திலும் அதையே அர்த்தப்படுத்த முடியுமே. அது அவ்வாறு அர்த்தப்படுத்துகிறது என்றால், “கொஞ்சக்காலம்” என்பது கிறிஸ்துவின் மறுவருகைக்குச் சற்றே முந்திய ஒரு காலவேளையாயிருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவரது மறுவருகையின்போது கண்ணிமைக்கும் வேளையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக உள்ளது எனலாம். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், பிசாசானவன் அழிக்கப்படும்படிக்கே விடுவிக்கப்படுகின்றான். இதை நாம், “பிசாசானவனின் நியாயத்தீர்ப்பின் நாள்” என்று நினைக்க முடியும்.

தரிசனத்தில் காலம் சென்றுகொண்டிருக்கையில், சாத்தான் மக்களினங்களை வஞ்சித்து, பூமியின் தொலைதூர மூலைகளில் இருந்து சேனையை ஒன்று கூட்டுவதாகக் காணப்படுகிறது என்பதே இந்த விளக்கத்திற்கான மறுப்பாக உள்ளது. இருப்பினும், இது ஒரு அடையாளத்துவமாக மாத்திரமே உள்ளது என்பதையும் இதை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நாம் அறிந்துள்ளபடி, காலம் என்பதே இதில் உள்ளடங்காதிருக்கலாம். ஒரு வேளை, ''ஆயிரம் ஆண்டுகள்'' என்பது பிசாசானவனை மாற்றியிருக்கவில்லை (அவன் வஞ்சிக்கிறவனாகவும் தேவனுடைய விரோதியாகவும் தொடர்ந்து நிலைத்திருக்கிறான்), எனவே

*அவன் அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படத் தகுதியானவனாக இருந்தான் என்பதைக் காண்பித்தலே இந்த அடையாளத்துவத்தின் நோக்கமாக இருக்கலாம்.*

*நீங்கள் போதுமான அளவு குழம்பிப்போய் இருக்கின்றீர்களா? "எப்பொழுது?" என்ற கேள்வியைக் குறித்து மூன்று கூற்றுக்களைக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்: (1) "கொஞ்சக்காலம்" என்பதன் வேளையைக் குறித்த பல்வேறு சாத்தியக்கூறுகளை நீங்கள் புரிந்துக்கொண்டு அவற்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. (2) சாத்தானின் "கொஞ்சக்காலம்" என்பது "எப்போது" இருக்கும் என்று நிச்சயத்துடன் பேச நமக்கு வழியெதுவும் இருப்பதில்லை என்பதைச் செயல்விளக்கப்படுத்துதல் என்பது, பல்வேறு சாத்தியக் கூறுகளைப் பட்டியலிடுவதற்கான ஒரு நோக்கமாக உள்ளது. (3) கடைசிப் பகுதி ஆய்வில், "எப்பொழுது" என்பது, பரிசுத்த ஆவியானவர் நமக்கு விடுக்கும் செய்திக்கு அடிப்படையில் பொருத்தமற்றதாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, இவை யாவும் தயாரிப்பாக இருந்துள்ளன. 20:7-10ன் "ஏன்?" அல்லது "எப்பொழுது?" என்பவை குறிப்பிடத்தக்கவைகளாக இருப்பதில்லை, ஆனால் "என்ன?" என்பதே குறிப்பிடத்தக்கதாக உள்ளது: பிசாசின் இறுதியான அடைவிடம் என்னவாக இருக்கும்?*

## முக்கியமான "என்ன?" (20:7-10)

*இவ்வசனப்பகுதி அடையாளத்துவமாக உள்ளது என்பதைச் சிந்தையில் வைத்துக்கொண்டு, நாம் இதை இன்னும் அதிக நெருக்கமாகக் கண்ணோக்குவோமாக.*

**வஞ்சித்தல்**

*எனது மைத்துனரான,* T. N. "Bud" Tibbles, *என்பவர் முழுநேரமும் சிறையில் ஊழியம் செய்கின்றார். அவர் என்னிடத்தில், நாடுமுழுவதிலும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படுபவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள், தங்கள் அனுபவத்தில் இருந்து கற்றுக்கொண்டதாகச் செயல்விளக்கப்படுத்துவது இல்லை, ஆனால் மீண்டும் சிறைச்சாலைக்கு வருவதிலேயே முடிவடைகின்றனர் என்பதாகக் கூறினார். யோவானின் தரிசனத்தில், சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் சிறையில் இருந்திருந்தான், ஆனால் அவன் ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லை. அவன் விடுதலையாக்கப்பட்ட உடனே, தான் விட்ட இடத்தில் இருந்து தனது வேலையைத் தொடர்ந்து செய்யத் தலைப்பட்டான்:* "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது, சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, … ஜாதிகளாகிய … மோசம்போக்கும்படிக்கு புறப்படுவான் …" (வசனங்கள் *7, 8அ).*

*"ஜாதிகள்" என்பவை* "பூமியின் நான்கு திசைகளிலும் இருப்பவை" *என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சொற்றொடராக்கம் தூரத்தைக் குறித்துச் செய்வதற்கு ஒன்றும் இருப்பதில்லை,[12] ஆனால்*

உலகளாவிய தன்மையைக் குறிப்பதாய் இருக்கிறது. "நான்கு" என்பது மனிதகுலத்திற்குரிய எண்ணாக உள்ளது.[13] "பூமியின் நான்கு திசைகள்" என்ற சொற்றொடர், "உலகம் முழுவதிலுமிருந்து" என்று மாத்திரம் குறிக்கிறது.

ஜாதிகள் என்பவை, ''கோகு, மாகோகு'' என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளன (வசனம் 8அ). வினோதமான இந்தப் பெயர்கள், ''அர்மகெதோன்'' என்று மனிதர்கள் பெயரிட்டுள்ள கற்பனையான யுத்தத்தைச் சுற்றிய நாடோடி இசையின் பாகமாகியுள்ளன.[14] இப்பெயர்கள் நமது காதுகளுக்குத் தீமையானவைபோன்று ஒலிக்கின்றன, ஆனால் இவைகள் முதல் நூற்றாண்டில் இருந்த அறியக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்கமானவைகளாய் இருந்தன. கோகு மற்றும் மாகோகு என்பவை, ''யூதத்துவச் சிந்தனையில் ஒருவேளை பொருள்விளங்காத தன்மையிலும்கூட, ஆழமாய்ப் பதிந்திருந்த'' பெயர்களாயிருந்தன.[15] மாகோகு என்பவன் யாபேத்தின் மகன்களில் ஒருவனாய் இருந்தான் (ஆதியாகமம் 10:2; 1 நாளாகமம் 1:5ஐயும் காணவும்). மாகோகின் சந்ததியார் ஒரு மக்களினமாக வளர்ந்தனர் என்பதும், மற்றும் ''மாகோகு'' என்பது அவர்களின் நாட்டினுடைய பெயராயிற்று என்பதும் உறுதி (எசேக்கியேல் 38:2; 39:6). "கோகு" என்பது யோவேலின் ஒரு மகனுடைய பெயராகும் (1 நாளாகமம் 5:4). நமக்குத் தெளிவாய்தெரியாத காரணங்கள் சிலவற்றினால், தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல், இவ்விரு சொற்றொடர்களையும் ஏற்புடையதாக்கி, மாகோகு என்பதை இஸ்ரவேலுக்கு[16] எதிராக அணிவகுத்து நின்ற படைகளின் அடையாளமாகப் பயன்படுத்தி, அவர்களின் அதிபதியை "கோகு" என்று அழைத்தார் (எசேக்கியேல் 38:2).[17]

ஏவுதல் பெற்றிராத இறைவெளிப்பாட்டு எழுத்தாளர்கள், எசேக்கியேலின் சொற்றொடராக்கத்தை எடுத்துக்கொண்டு, இவ்விரு பெயர்களையும், மேசியாவின் விரோதிகளைக் குறிப்பிடுவதற்கான பொதுவான வழிமுறையாகப் பயன்படுத்தினர். இந்தப் பெயர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 20:8ல் ஒரு பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவைகள் யோவானின் நாட்களில் இருந்த அல்லது நமது நாட்களில் இருக்கிற குறிப்பிட்ட மக்களினங்களைக் குறிப்பதில்லை; மாறாக இவைகள் அடையாளத்துவமாகவும், "தேவனை அறியாதவர்களும், ... நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களும், ..." (2 தெசலோனிக்கேயர் 1:8) என்ற யாவரையும் மற்றும் எவரொருவரையும் குறிப்பதாகவும் உள்ளது. ஜிம் மெக்கைகன் என்பவர், ''அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆயினும் குறிப்பாக ஒருவருமில்லை"[18] என்று கூறினார். G. B. கேயர்டு என்பவர், ''கோகுவின் தொப்பி யாருக்கெல்லாம் பொருந்துகிறதோ, அவர்களெல்லாம் அதை அணிந்துக் கொள்ளலாம்"[19] என்று எழுதினார்.

பிசாசானவன் தனக்கு வேலைசெய்வதற்கென்று எப்போதுமே யாரேனும் சிலரைக் கண்டறிய முடியும் என்பதே இவ்வசனப்பகுதியில் இருந்து வரும் பாடமாக உள்ளது. மிருகம் மற்றும் கள்ளத்தீர்க்கத்தரிசி என்ற

*அவனது முக்கியமான இரண்டு கூட்டாளிகள் தோற்கடிக்கப் பட்டிருக்க லாம், ஆனால் இது அவனைத் தடைசெய்யவில்லை. அவன் வேகமாய் வெளியேறி கோகுவையும் மாகோகுவையும் பணிக்கமர்த்தினான்.*

*எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் பற்றி நீங்கள் இன்னும் ஒரு விஷயத்தை அறிய வேண்டும்: அதில், கோகு மற்றும் மாகோகு ஆகியோர்மீது தேவகோபம் ஊற்றப்படுதல்மீதே வலியுறுத்தம் இருந்தது. (எடுத்துக்காட்டாக, எசேக்கியல் 39:6ஐக் காணவும்.) இவ்விதமாக, வெளிப்படுத்தின விசேஷம் 20ல் "கோகு" மற்றும் "மாகோகு" ஆகியோர் தேவனுடைய விரோதிகளாக மாத்திரமல்ல, ஆனால் விரைவிலேயே தோற்கடிக்கப்படவிருந்த விரோதிகளாக இருந்தனர்.*

**தீர்மானம் எடுத்த நிலை**

*மக்களினங்களை ''யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளுதல்'' என்பதே (வசனம் 8இ) அவர்களை வஞ்சிப்பதற்குச் சாத்தான் கொண்டிருந்த நோக்கமாயிருந்தது. இது நாம் 16:14-16 மற்றும் 19:19[20] ஆகிய வசனப் பகுதிகளில் வாசிக்கிற அதே யுத்தமாகவே உள்ளது - இது நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையில் நடைபெறும் தீர்மானமான கடைசி ''யுத்தம்'' ஆகும்.[21] (''சாத்தானும் அவனது படைகளும்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*8ம் வசனத்தின் முடிவுப்பகுதியானது, சாத்தானால் ஒன்றுகூட்டப் பட்ட படைத்துருப்புக்களின் ''தொகை கடற்கரை மணலத்தனை யாயிருந்தது'' என்று கூறுகிறது (வசனம் 8ஈ). இவ்வசனப்பகுதி, உச்சக்காட்சியை நோக்கி நகருகையில், நாம் சாத்தியக்கூறுள்ள வகையில் மிகவும் திரண்ட படையைப் பற்றிக் கற்பனை செய்து கொள்ளவேண்டும். பேரளவிலான இந்தப் படையானது, "பூமியெங்கும் பரம்பிற்று" (வசனம் 9அ). இது புவியியல் ரீதியான ஒரு இடம் அல்ல,[22] ஆனால் அடையாளத்துவத்தின் பகுதியாகவே உள்ளது.*

*படையினர், "பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்" (வசனம் 9ஆ). "பாளையம்" மற்றும் "நகரம்" என்பவை மக்களின் தனித்தனியான இரு குழுக்களையல்ல, ஆனால் ஒரே குழுவையே அடையாளப்படுத்துகிறது: அவர்கள் தேவனுடைய மக்கள் எனப்படுகின்றனர். ஹோமர் ஹெய்லி என்பவர், ''இரு சொற்றொடர்களும், கர்த்தருடைய சபை என்ற ஒரே குழுவின் மாறுபட்ட இரு அம்சங்களைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன'' என்று எழுதினார்.[23] ஹென்றி ஸ்வீட் என்பவர், " 'பரிசுத்தவான்களின் பாளையம்' மற்றும் 'பிரியமான நகரம்' என்பவை, உலகளாவிய சபை என்ற ஒரே சரீரத்தின் இரு அம்சங்களாக உள்ளன, ...''[24] என்று கூறினார். 12ம் அதிகாரத்தில், "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனு டைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்போயிற்று'' என்று நமக்குக் கூறப்பட்டது (வசனம் 17). முடிவுவரையிலும், இயேசுவைப் பின்பற்றுபவர்களே சாத்தானுடைய*

*விரோதம் மற்றும் தேவனுடைய அன்பு ஆகியவற்றின் கவனம் குவியும் இடமாக உள்ளனர்.*

*பாளையம் என்பது நகரம் என்பதில் இருந்து மாறுபடுகிறது, ஆனால் இந்தச்சொற்றொடர் ஒவ்வொன்றும் சபையைப் பற்றிச் சிலவற்றை நமக்குக் கூறுகிறது. "பாளையம்" என்ற வார்த்தை, பொறுப்பைப் பற்றிப் பேசுகிறது: இது வனாந்தரத்தில் அலைந்து திரிந்த நிகழ்ச்சியுடன் தொடர்புடைய ஒரு சொற்றொடராகும் (எபிரெயர் 13:11, 13ஐக் காணவும்). இது, நாம் ஒரு அந்நிய பூமியில் பரதேசிகளாய் இருக்கின்றோம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது (எபிரெயர் 11:13).[25] "நகரம்" என்ற வார்த்தை வெகுமதியை மறைமுகமாய் உணர்த்துகிறது: யூதர்களுக்கு, மாம்சப் பிரகாரமான எருசலேமே "பிரியமான நகரமாய்" இருந்தது; ஆனால் கிறிஸ்தவர்கள், "சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமான பரம எருசலேமினிடத்திற்கும்" வந்துள்ளனர் (எபிரெயர் 12:22).[26] இங்குதான் கிறிஸ்தவர்கள் கர்த்தருடன் ஒன்றிப்பைக் கொண்டுள்ளனர்.[27]*

*சாத்தானின் மூழ்கடிக்கும் சேனைகளினால் சூழப்பட்ட பாளையத்தை/நகரத்தை கற்பனையில் சித்தரித்துக் கொள்ளுங்கள். பூமிக்குரிய கண்ணோக்கக் கருத்தில் இருந்து காணுகையில், தேவனுடைய மக்களுக்கு விரோதமானவைகள் மேற்கொள்ளப்பட முடியாதவைகளாகக் காணப்பட்டன. நம்பிக்கையற்ற தன்மை இருப்பதாகத் தோற்றம் அளிப்பதை நீங்கள் உணர்ந்தால் அன்றி, அடுத்து வருகிறது என்ன என்பதை நீங்கள் முழுமையாக மதித்து உணர முடியாது. சாத்தான் தனது கடைசி மாபெரும் தாக்குதலைச் செயல்படுத்தத் தொடங்கியிருந்தான் ("கடைசி" என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் உள்ளது).*

**தோற்கடிக்கப்பட்ட நிலை**

*பிசாசின் சேனைகள், ஊனமாக்கும் அடியைக் கொடுக்கும்படி முன்னேறியபோது, என்ன நடந்தது? "அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது" (வசனம் 9இ).[28]*

*பழங்காலக் கையெழுத்துப்பிரதிகள் சிலவற்றில் "பரலோகத்தில் தேவனிடத்திலிருந்து அக்கினி"[29] என்றுள்ளது. அனேகமாக இது மூலவாசிப்பாய் இராதிருக்கலாம் என்றிருக்கையில், இது சரியான கருத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது, தேவன் சோதோம் கொமோராவின்மீது அக்கினியை வருஷிக்கப் பண்ணினார் (ஆதியாகமம் 19:24), அவர் நாதாப் மற்றும் அபியூ ஆகியோரைத் தண்டிப்பதற்கு அக்கினியை பயன் படுத்தினார் (லேவியராகமம் 10:1, 2), மற்றும் அவர் எசேக்கியேலின் மாகோகு மீது அக்கினியை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார் (எசேக்கியேல் 39:6). அதுபோன்றே, ஒருநாளிலே கர்த்தர், "நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, ... ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு" வருவார் (2 தெசலோனிக்கேயர் 1:7, 8).*

*இந்த "யுத்தம்" பற்றி சித்தரிப்பு ஒவ்வொன்றிலும் உள்ளது போலவே, உண்மையான சண்டை எதுவும் இருக்கவில்லை. பார்ட்டன் காஃப்மென்*

*என்பவர், "இது ஒரு 'யுத்தம்' என்பதாகவே இல்லைதானே? தேவன் பேசினார், அது செய்யப்பட்டது, ஒரேயொரு அக்கினி அடியினால் துன்மார்க்கத்தின் முழுக்கணக்கையும் தேவன் தீர்த்து வைத்தார்"[30] என்று விளக்கம் அளித்தார். "தேவன் துன்மார்க்கத்தை அழிப்பதற்கு மனவிருப்பமாய் இருக்கின்றபோது, யுத்தத்தின் தோற்றம்கூட இல்லாத அளவுக்கு அவருடைய வல்லமையானது மிகவும் மேற்கொள்ளுவதாக உள்ளது."[31]*

***நாசமடைந்த நிலை***

*சாத்தானுக்கு என்னவாயிற்று? "மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய[32] அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்பட்டார்கள்" (வசனம் 10). ("சாத்தான், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தூக்கி எறியப்படுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*வெளிப்படுத்தின விசேஷத்தின் உருவகத்தில், வலுசர்ப்பமானது முதலில் "பூமியிலே விழத்தள்ளப்பட்டது" (12:9), பின்பு அது "பாதாளத்திலே தள்ளியடைக்கப்பட்டது" (20:2). கடைசியாக, நமது வசனப்பகுதியில், அது "அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டது" (20:10).[33] "இவ்வாறாக, மனிதகுலத்தை நீண்ட காலமாக வஞ்சித்தும் பயமுறுத்தியும் வந்த மேட்டிமையான அந்த ஆவியினுடைய வரலாறு முடிகிறது"[34] - "அதன் உருவமானது தனது இருளான நிழலை மனிதவரலாற்றின் நீண்ட பயங்கரமான பள்ளத்தாக்கில் வீசியிருந்தது."[35]*

*நாம் 10ம் வசனத்தை விட்டுச்செல்வதற்கு முன்பு, நான்கு விளக்கங்கள் அவசியமாக உள்ளன:*

*(1) பிசாசானவன் இப்போது நரகத்தில் இல்லை, காலத்தின் முடிவு வரும் வரையில் அவன் நரகத்திற்குள் தள்ளப்படமாட்டான். அவனது கூட்டாளிகள் - ரோமாபுரி போன்றவர்கள் - வரலாற்று ஓட்டத்தில் தள்ளப்பட்டுவிட்டனர், ஆனால் கர்த்தர் மறுபடியும் வரும்போது சாத்தான் தானே அப்போதும் இருப்பான்.*

*(2) பிசாசானவன் தண்டிக்கப்படும்படி நரகத்திற்குள் தள்ளப்படுவான். பிசாசானவன் நரகத்தினுடைய பிரதான மேற்பார்வையாளனாக இருக்கின்றான் மற்றும் அங்கு நுழைபவர்களை வாதிப்பதில் அவன் மகிழ்வடைகின்றான் என்பது பொதுவானதொரு தவறான புரிந்து கொள்ளுதலாக உள்ளது. ஜான் மில்ட்டன் என்பவர் எழுதிய Paradise Lost என்ற புத்தகத்தில், "பரலோகத்தில் ஊழியம் செய்வதைவிட நரகத்தில் ஆளுகை செய்வது மேலானது" என்று அவர், சாத்தானைச் சித்தரித்தார்.[36] மில்ட்டன் ஒரு மாபெரும் கவிஞராக இருக்கலாம், ஆனால் அவர் இறையியலாளர் என்ற வகையில் வறியவராய் இருந்தார். சாத்தான் நரகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அங்கே செல்லமாட்டான், ஆனால் அங்கே அவன் தள்ளப்பட்டு அடைக்கப்படுவான். அவன் வதைப்பவனாயிருக்க மாட்டான்; ஆனால் வதைக்கப்படுபவனாய்*

இருப்பான்.

(3) நரகம் என்பது பயங்கரமான இடமாயிருக்கும். இவ்வசனப் பகுதியில் உள்ள உருவகம் இதை, "அக்கினியும் கந்தகமுமான கடல்" என்று கூறுகிறது (வசனம் 10ஆ). வேறொரு இடத்தில் இது, "அழுகையும் பற்கடிப்பும் உள்ள புறம்பான இருள்" என்று விவரிக்கப்படுகிறது (மத்தேயு 22:13). இது, "புழுக்கள் சாகாத மற்றும் அக்கினி அவியாத" இடமாக உள்ளது (மாற்கு 9:48).[37] H. L. எல்லிஸன் என்பவர் கூறியவாறு, இந்த விவரிப்பில் அடையாளத்துவம் பயன்படுத்தப்பட்டது என்ற உண்மையானது, "இதை நாம் அர்த்தத்தில் இருந்து உரித்துப்போட வேண்டும் என்ற வகையில் நமக்கு உரிமையளிப்பதில்லை. அடையாளத்துவம் என்பது எப்போதுமே முழுமையான சத்தியத்திற்கும் குறைவானவைகளையே வெளிப்படுத்து கிறது."[38] நாம், வேதவசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மெய்சிலிர்க்க வைக்கும் சொற்றொடர்களை வாசிக்கையில், நரகம் எவ்வளவு பயங்கரமான இடமாய் இருக்கும் என்று நினைத்துப்பார்க்கவும் நாம் துணிவதில்லை!

(4) நரகம் என்றென்றைக்கும் இருக்கும். நரகம் என்பது நிர்மூலமாகும் என்று விளக்கம் தரச் சிலர் முயற்சி செய்கின்றனர்,[39] ஆனால் இவ்வசனப் பகுதியானது, பிசாசானவனும் அவனது முன்னாள் கூட்டாளிகளும் "இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" என்று கூறுகிறது (வசனம் 10இ).[40] லியோன் மோரிஸ் என்பவர், "இடைவேளையோ அல்லது முடிவோ இராது"[41] என்று கவனித்துள்ளார்.

இவ்விதமாக சாத்தானின் முடிவு சித்தரிக்கப்பட்டுள்ளது: அதாவது, அவனது ஊழியத்தின் முடிவு, அவனது செல்வாக்கின் முடிவு. அவனது சோதித்தல்களின் முடிவு, மற்றும் மனிகுலத்தை அவன் வாதிப்பதின் முடிவு. சாத்தானே போ - (நல்ல முறையில் வேண்டாதவற்றைக் கிழித்துப்போடுகின்றேன்!) போவது நல்லதாயிற்று!

## முடிவுரை

வெளிப்படுத்தின விசேஷத்தின் மிகவும் கடினமான பகுதிகளில் ஒன்றின்மீது நாம் மூன்று பாடங்களைச் செலவிட்டுள்ளோம். நீங்கள் எங்களில் எஞ்சியுள்ளவர்கள்போல் இருந்தால், வெளிப்படுத்தின விசேஷம் 20:1-10ன் பகுதிகள், உங்கள் சிந்தைக்கு இன்னமும் தெளிவற்றிருக்கும், சில விபரங்கள் இன்னமும் உங்களைத் திகைக்கச் செய்யும். தேவன் உங்களுக்குப் புத்தம்புதிய உட்கண்ணோட்டத்தையும் புரிந்துகொள்ளு தலையும் தர வேண்டும் என்று ஜெபித்து, நீங்கள் இவ்வசனப்பகுதியைப் படிக்கத்தொடருவதை விரும்புவீர்கள் என்பது உறுதி. நீங்கள் அவ்வாறு செய்யும்போது, இதன் விபரங்களில் அல்ல, ஆனால் முற்றான சித்தரிப்பிலேயே செய்தியுள்ளது என்பதை மறக்க வேண்டாம். 1முதல் 10 வரையுள்ள வசனப்பகுதியின் செய்தியை பேக் என்பவர் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்:

... கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்கள் தங்கள் மரணத்திற்குப்

> *பின்பு கர்த்தரின் மகிமையில் பங்கடைகின்றனர், மற்றும் சாத்தானையும் அவனது முகமைகள் யாவரையும் தூக்கியெறிதலின் நிச்சயம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மை இதில் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது மாபெரும் மையமான சத்தியமாக உள்ளது. இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தை நமக்குச் சொந்தமானது என்று உரிமைகோரி, நாம் நம்பிக்கையுடனும், கர்த்தர் நமக்கு உறுதியளித்துள்ள வெற்றியின் நிச்சயத்தன்மையுடனும் ஜீவிக்க முடியும்.*[42]

*சர்க்கஸில் டிரெப்பீஸ் எனப்படும் பார்விளையாட்டுக்காரருடன் ஒருமுறை ஒரு மனிதர் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவர்கள், அந்த பார்விளையாட்டுக்காரரும் அவரது கூட்டாளிகளும் நிகழ்ச்சி நடத்தும் இடத்தின்கீழே வலைவிரித்திருப்பதன் நோக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அந்த பார்விளையாட்டுக்காரர், விளையாடு பவர்கள் தங்கள் கழுத்துக்களை முறித்துக்கொள்வதில் இருந்து பாதுகாப்பதற்காகவே கீழே வலை விரிக்கப்பட்டுள்ளது என்று ஒப்புக்கொண்டார், ஆனால் அத்துடன் கூடுதலாக அவர், "வலையில்லாதிருந்தால் நாங்கள் அதிகம் படபடப்புடன் இருப்போம், அப்போது, நாங்கள் கீழே விழுந்து விடுவதற்கான சாத்தியகூறு அதிகமாகும். வலையில்லையென்றால் நாங்கள் செய்கின்ற சில வீரதீர சாகசங்களை செய்யத் துணியமாட்டோம்" என்றும் கூறினார்.*[43]

*வெளிப்படுத்தின விசேஷம் 20:1-10ல் தரப்பட்டுள்ளவை போன்ற உறுதிப்பாடுகள், தேவன் தமது மக்களுக்காக விரித்துவைத்துள்ள "பாதுகாப்பு வலை" என்பவையாக உள்ளன. இந்த "பாதுகாப்பு வலையானது" கிறிஸ்தவர்களை, வேறுவிதத்தில் அவர்கள் ஒருபோதும் சாதிக்க இயலாதவற்றைச் சாதிப்பவர்கள் ஆக்குகிறது.*

*இந்த உறுதிப்பாடுகள் உங்களுக்கானவைகளாய் இருக்கின்றனவா? நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை உரிமைகோர முடியுமா? இதை நான் வேறுவிதமாய் கேட்க என்னை அனுமதியுங்கள்: நீங்கள் தேவனுடைய பிள்ளையாக, அவருக்கு உண்மைநிறைந்த பிள்ளையாக இருக்கின்றீர்களா? இல்லையென்றால் நம்பிக்கையான கீழ்ப்படிதலில் அவரிடமாய் திரும்புவதற்கு இதுவே வேளையாக உள்ளது!*[44]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கான சில மாற்றுத் தலைப்புகள் இங்கே தரப்படுகின்றன: "அழிக்கிறவனின் அழிவு"; "சாத்தானின் அன்னப்பாடல்"; "பிசாசின் அடைவிடமும் அழிவும்"; மற்றும் "நல்ல முறையில் அல்லவற்றை அழித்தல்!"*

குறிப்புகள்

[1]கிறிஸ்துவின் விரோதிகள் ஒரு வரிசைமுறையில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்பு அதற்கு நேர் எதிர் வரிசைமுறையில் காட்சியில் இருந்து அகன்று செல்லுதல் பற்றி நாம் கற்றுள்ளவற்றை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம். இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்ற பாடத்தில் காணவும். [2]எது நடந்தாலும் தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பது மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தின விசேஷத்தில் அறிவிக்கப்படுகிறது என்பது காணாது விடக்கூடாத சத்தியமாக உள்ளது. [3]3ம் வசனத்தில் உள்ள "வேண்டும்" என்ற வார்த்தையானது *dei* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது "ஒழுக்கரீதியான அத்தியாவசியத்தை" சுட்டிக்காண்பிக்கிறது. [4]Donald Guthrie, *The Relevance of John's Apocalypse* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 102-3. [5]Frank Pack, *Revelation,* Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 52. [6]வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு எவ்வித அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டாலும், இது உண்மையானதாக உள்ளது. [7]13ம் அதிகாரத்தில் இரு மிருகங்களைப் பற்றிய படிப்பில், "தெய்வீகத்துவம்," "உயிர்த்தெழுதல்" மற்றும் இவைபோன்றவற்றில் சாத்தான் தனது சுய போலியானவைகளைக் கொண்டுள்ளான் என்று நாம் குறிப்பிட்டோம். "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "காணுங்கள், கவனியுங்கள் மற்றும் கற்றுக்கொள்ளுங்கள்" மற்றும் "மகா வஞ்சனையாளன்" ஆகிய பாடங்களை மறுகண்ணோட்டமிடவும். [8]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்ற பாடத்தில் உள்ள குறிப்புகளைக் காணவும். [9]12:12ம் வசனத்தில் உள்ள "மாத்திரம்" என்ற வார்த்தை மூலவசனத்தில் காணப்படுவதில்லை. (இது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது.) 20:3உடனான இணைகருத்தை அதிகம் தெளிவாக்குவதற்காக நான், "மாத்திரம்" என்ற வார்த்தையை நீக்கியுள்ளேன். [10]கண்டிப்பான எதிர்காலவியல் அணுகுமுறையாளர்கள், "கொஞ்சக்காலம்" என்பது, ரோமப் பேரரசின்மீது கிறிஸ்தவத்தின் வெற்றிக்குப் பின்பும்கூட துன்புறுத்துதல் ஏற்படுத்தப்படுதலைக் குறிக்கிறது என்று நம்பியிணங்கியுள்ளனர்.

[11]இந்தச் சொற்றொடர், இரு வசனங்களிலும், ஆங்கிலம் மற்றும் கிரேக்கு ஆகிய மொழிகளில் ஒரேமாதிரியாகவே உள்ளது. [12]உணர்வியலாளர்கள் வழக்கமாக, இந்த மக்களினங்களை அமெரிக்காவில் இருந்து மிகத்தொலைவில் உள்ளவையாக்குகின்றனர். [13]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் "நான்கு" என்ற எண்ணின் அடையாளத்துவத் தனிச்சிறப்பைக் காணவும். [14]"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஒருபோதும் இருந்திராத, ஒருபோதும் இராதிருக்கப்போகிற யுத்தம்" என்ற பாடத்தைக் காணவும். [15]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 194. [16]ஒரு வேளை, மாகோகு என்பவன் இஸ்ரவேலை எதிர்ப்பவனாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாது இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் இஸ்ரவேல் நாட்டில் இருந்து சற்று தொலைவில் வாழ்ந்திருந்ததால், இந்தப்பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் அறியப்படாதவர்கள் என்று கருதப்பட்டிருக்கலாம். [17]எசேக்கியேல் 38 மற்றும் 39 ஆகிய அதிகாரங்களில் உள்ள "கோகு" என்பது அந்தியோகஸ் எபிபெனெஸ் என்பவனைக் குறித்து நின்றதாக பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றனர். அந்தியோகஸ் எபிபெனெஸ் என்பவன் யூதருடைய தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கியதால் யூதர்களால்

*வெறுக்கப்பட்டவனாயிருந்தான், இவன் சீரியா நாட்டின் அதிபதியாய் இருந்தான். இவனது செயல்கள், மக்காபேயரின் இயக்கத்தையும், ஏற்பாடுகளுக்கு மத்தியிலான காலத்தின்போது சற்றுக்காலம் யூதர்களுக்கு விடுதலையையும் விளைவித்தன. மற்றவர்களோ, எசேக்கியேல் தமது சிந்தையில், பழங்கால பாபிலோனைக் கொண்டிருந்தார் என்று நினைக்கின்றனர்.* [18]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 304. [19]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 256. [20]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஒரு போதும் இருந்திராத, ஒருபோதும் இராதிருக்கப்போகிற யுத்தம்" என்ற பாடத்தைக் காணவும். மேலும் இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்ற பாடத்தில், 19:19க்கான விளக்கங்களையும் காணவும்.*

[21]*மூன்று விபரங்களுமே ஒரே யுத்தத்தையே குறிக்கின்றன என்பதற்கு இதற்கு முன்பு கொடுக்கப்பட்ட மூன்று காரணங்களுடன் கூடுதலாக, பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும்: கோகு மற்றும் மாகோகு என்பவர்கள் பற்றிய உருவகமானது, 19ம் அதிகாரத்தில் உள்ள, இந்த யுத்தம் பற்றிய இரண்டாவது விபரத்தின் தொடர்பாக பயன்படுத்தப்பட்டது. இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்ற பாடத்தில் உள்ள குறிப்புகளை காணவும்.* [22]*"வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஒருபோதும் இருந்திராத, ஒருபோதும் இராதிருக்கப்போகிற யுத்தம்" என்ற பாடத்தைக் காணவும்.* [23]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 398. [24]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 269. [25]*"பாளையம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது சிலவேளைகளில், ஒரு இராணுவ முகாமைக் குறிப்பிடுவதற்கு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளதால், இந்தச் சொற்றொடர், கிறிஸ்தவர்கள் போராட வேண்டியதாக உள்ள ஆவிக்குரிய யுத்தத்திற்கான குறிப்பாக இருக்கலாம் (எபேசியர் 6:10-18) என்று சில எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.* [26]*கலாத்தியர் 4:26ஐயும் காணவும்.* [27]*நாம், 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்களைப் படிக்கும்போது, "பரம எருசலேம்" என்பது பற்றி இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்வோம்.* [28]*16 மற்றும் 19ம் அதிகாரங்களில் உள்ள அதே "யுத்தத்தையே" 20:8, 9 வசனங்கள் சித்தரிக்கின்றன என்பதை பற்றி மீண்டும் வலியுறுத்துவதற்காக நான், பிரையன் வாட்ஸ்ஸிடம், இந்தப் புத்தகத்தில் "சாத்தானும் அவனது சேனைகளும்" நடத்திய "யுத்தம்" பற்றிய காட்சியை வரைவதற்கு, அந்த அதிகாரங்களில் உள்ள படங்களைத் தழுவியமைக்கும்படி கூறினேன். அவர் வலுசர்ப்பம் மற்றும் பாளையம் ஆகிய விபரங்களையும், வானத்திலிருந்து அக்கினி வந்து அழித்தல் என்ற விபரத்தையும் கூடுதலாகக் கொடுத்தார். நான் முன்பே கூறியபடி, இந்த அணுகுமுறையானது பெரிய சித்தரிப்பை ஏற்படுத்தாதிருக்கலாம், ஆனால் இது, மூன்று வசனப்பகுதிகளும் ஒரே "யுத்தம்" பற்றியே பேசுகின்றன என்ற கருத்திற்கு மறுவலியூட்டுகிறது.* [29]See Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis: Concordia Publishing House, 1976), 134. [30]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 478.

[31]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 233. [32]*19:20ஐக் காணவும்.* [33]*இந்தக் குறிப்புகள் ஒவ்வொன்றிலும், "எறிவதற்கு" என்று அர்த்தம் தருகிற கிரேக்க*

*வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அடையாளத்துவமாகத்தான் உள்ளது, ஆனாலும் இதன் வளர்நிலையானது ஆர்வத்திற்குரியதாக உள்ளது.* [34]Franzmann, 134. [35]Owen L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 362. [36]Book 1, line 262, quoted in James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 99. *Paradise Lost என்பது ஆங்கில கவிஞரான ஜான் மில்ட்டன் (1608-74) என்பவரின் தலைசிறந்த படைப்பாயிருந்தது.* [37]*இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்ற பாடத்தில், 19:20க்கான விளக்கங்களையும், அடுத்த பாடத்தில் காணப்படும் "அக்கினியும் கந்தகமும் கலந்த கடல்" என்பது பற்றிய கலந்துரையாடலையும் காணவும்.* [38]H. L. Ellison, *1 Peter - Revelation*, Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 84-85. [39]*அவ்வப்போது நான், சாத்தானுடைய முடிவு தொடர்பாக, "அழித்தல்" அல்லது "அழிவு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளேன். இந்தச் சொற்றொடரை நிர்மூலமாகுதல் என்று எவரொருவரும் விளக்கப்படுத்தியிருக்கவில்லை என்று நான் நம்புகின்றேன். ஒரு மனிதர் இன்னொரு மனிதரிடம், "நான் உன்னை அழிக்கப்போகிறேன்!" என்று கூறலாம், ஆனால் இது அம்மனிதர் தாம் பேசிக்கொண்டுள்ள அடுத்த மனிதரை இல்லாது ஒழித்துவிடுதல் என்று நோக்கங்கொண்டுள்ளார் என்பதாக பொதுவாக அர்த்தப்படுவதில்லை. அவர் அந்த மனிதருடைய வேலை அல்லது வாழ்வின் சில அம்சங்களை அழிக்கத் திட்டமிட்டுள்ளார் என்றே அர்த்தமாகிறது, அதுபோன்றே, சாத்தானுடைய வேலை கடைசியில் முற்றுப்பெறும். அவனது செல்வாக்கு ஒழிந்துபோகும், ஆனால் அவன் இன்னமும் - நரகத்தில் - உயிருடன் இருந்து கொண்டிருப்பான்.* [40]*"சதாகாலங்களிலும்" என்ற சொற்றொடரின் தனிச்சிறப்பு மற்றும் நரகத்தின் நித்திய இயல்பு ஆகியவற்றைப் பற்றிய கலந்துரையாடல் ஒன்றிற்கு,* Hailey, 398-99*ல் காணவும்.*

[41]Morris, 233. [42]Pack, 55. [43]Adapted from Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching From* Leadership Journal (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 215. [44]*நீங்கள் இதை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கிறிஸ்தவர்களாவது எப்படி (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:37, 38) மற்றும் தேவனுடைய பிள்ளையாக இருந்துகொண்டு தவறு செய்பவர் அவரிடமாய் திரும்புவது எப்படி (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16) என்பவற்றைக் கூறவேண்டும் என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்வி

1. *நரகம் தொடக்கத்தில் யாருக்கென்று ஆயத்தமாக்கப்பட்டது?*
2. *துன்மார்க்கம் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டுமென்றால், சாத்தான் நீக்கப்பட வேண்டியது அவசியமாய் இருப்பது ஏன்?*
3. *சாத்தான் "கொஞ்சக்காலம்" விடுவிக்கப்படுவது ஏன் என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? (உங்கள் கருத்து வேறு எவருடைய கருத்தையும்போலவே நல்லதாகவே உள்ளது!)*
4. *"ஆயிரம் ஆண்டுகள்" என்பது அடிப்படையில் ஒரு கருத்தை (முழுமைத்துவத்தை) குறிக்கிறது என்பதால், "கொஞ்சக்காலம்"*

என்பதும் ஒரு கருத்தைக் குறிப்பதாக இருப்பதற்குச் சாத்தியம் உள்ளதா? இதற்கு உங்கள் பதில் “ஆம்” என்றால், அந்தக் கருத்து என்னவாக இருக்கும் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?

5. நமது பாடத்தின்படி, சாத்தான் தனது ‘‘ஆயிரம் - ஆண்டுகள்’’ சிறையிருப்பின்போது எதையாவது கற்றுக்கொண்டிருந்தானா?
6. “கோகு மற்றும் மாகோகு” என்ற பெயர்கள் பற்றிய வேதாகமப் பின்னணியைத் தரவும். அவைகள் வெளிப்படுத்தின விசேஷம் 20ல் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன?
7. 9ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “பாளையம்”/“நகரம்” என்பது என்ன? இந்தச் சொற்றொடர்கள் கர்த்தருடைய சபையைப் பற்றி நமக்குக் கூறுவது என்ன?
8. “அர்மகெதோன் யுத்தம்” என்று அழைக்கப்படும் விஷயம் பற்றி நாம் முன்பு கற்றுள்ளவற்றை மறு கண்ணோட்டமிடவும். இந்த ‘‘யுத்தம்’’ பற்றிய முந்திய இரண்டு விபரங்களில், உண்மையில் யுத்தம் எதுவும் நடந்ததா? முந்திய இரு விபரங்களிலும் நடைபெற்றவை என்ன? இந்த விபரத்தில் நடைபெற்றது என்ன?
9. சாத்தானின் சேனையினுடைய தோல்விக்குப் பின்பு, அவனுக்கு என்ன நேர்ந்தது? அவன் நரகத்தில் மேற்பார்வையாளனாக இருக்கும்படி அங்கு அனுப்பட்டானா?
10. நரகம் பயங்கரமாயிருக்குமா? நீங்கள் அங்கு செல்வதில் இருந்து உங்களை எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்?



சாத்தானும் அவனது படைகளும் (20:8, 9)



சாத்தான், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே
தூக்கி எறியப்படுதல் (20:10)